ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் 18 கிலோ மீட்டர் தூரம் என்று நான் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 12 கிலோ மீட்டர் என்பது உண்மை. ஆனால் அந்தப் பண்ணை வயல் பள்ளத்தூர், பட்டுக்கோட்டை இந்த ஏரியாக்களைச் சுற்றி நீண்ட ஒரு பாலைவனச் சோலை போல அமைந்திருக்கிறது. ஆகவே அங்கிருந்து கிராமங்களுக்குச் செல்வது என்பது மிகவும் கஷ்டம். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு தமிழகத்திலே கால்நடை மருந்தகம் அமைக்கின்றபோது, முழு மானியத்தோடு 1, 2, 3 என்று வரிசைப்படுத்தி, இங்கே நீங்கள் மானியம் வகுப்பதைத் தவிர்த்து, தமிழகத்தில் உள்ள எல்லாக் கால்நடை மருந்தகங்களுக்கும் முழு மானியத்தோடு அந்த கிளை மருந்தகங்களை அமைக்க அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைவயல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அங்கே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், பண்ணைவயல் கிராமத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்தில், சுற்றளவில் வேறு ஏதேனும் கால்நடை மருந்தகங்கள் இல்லாது இருக்குமானால், அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் முழு அளவு மானியம் வழங்குகின்ற சூழ்நிலை தற்சமயம் அரசிடம் இல்லை என்பதை மீண்டும் வலிறுத்த விரும்புகிறேன்.

மதுரை மாநகருக்குப் பெருநகரத் திட்டம்.

* 2209 ஏ—திரு. சோ. பால்ராஜ் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாநகருக்கு பெருநகரத் திட்டம் தயாரிக்கும் பணி எந்த அளவில் உள்ளது ?

(ஆ) எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை உள்ளூர் திட்டப் பகுதியில் கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து ''முழுமைத் திட்டம்'' திருத்தப்பட வேண்டியுள்ளதால், மதுரை மாநகர உள்ளூர் திட்டக்குழு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஆ) மேற்கூறிய முழுமைத் திட்டம் அரசால் பெறப்பட்டு நகர் ஊரமைப்புச் சட்ட விதி 28-ன்கீழ் இறுதி ஒப்புதல் வழங்கப் பட்டு, சட்ட விதி 30 (2)-ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப் பட்ட பின்னால் அந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் மதுரை மாநகரத்தில், பெருநகரத் திட்டத்தில், எந்தெந்த திட்டங்கள் தீட்டப்பட்டுள் ளன என்பதை அறிய விரும்புவதோடு அதில்பாதாளச் சாக்கடை, சுரங்கப் பாதை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு விடை.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் எந்தெந்த உள்ளூர் பகுதிகள் என்ற குறிப்பு தற்போது இல்லை. அந்த முழுமைத் திட்டம் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மனதில் கொண்டு, அந்த உள்ளூர் திட்டத்தின் மூலமாக குடியிருப்புப் பகுதி, வணிகப் பகுதி, பொது விநியோகப் பகுதி, கல்விப் பகுதி, தொழில் பகுதி, வேளாண்மைப் பகுதி போன்ற பல்வேறு இனங்களாகப் பிரிக்கப் பட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் உள்ளூர் திட்டக் குழுவின் மூலமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. பால்ராஜ் : சட்டப் பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு மானிய உதவி செய்து உள்ளதா என அறிவதோடு விதி 28 மற்றும் 30 என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவ ரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், முழுமைத் திட்டம், மாஸ்டர் பிளான் என்று அறிவிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தீட்டப்படுள்ளது. அதற்கு எவ்வளவு நிதியை மத்திய அரசு தருகிறது என்ற விவரம் தற் போது குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் வளர்ந்து வருகிற நகரம் என்ற நிலை இல்லாமல், வளர்ச்சி தேக்கம் அடைந்துவிட்ட நிலை இருக் கிற காரணத்தால், அந்த வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், அதிகப்படுத்தவும், அந்த மாஸ்டர் பிளானில், மேலூர் செல்கிற வழியில் விவசாயப் பகுதி இருக்கின்ற நிலையையும் அடுத்து, அருப்புக்கோட்டை பகுதியை தொழில் பகுதியாகவும், கல்விப் பணிக்கு அனுப்பாதபடி போன்ற பகுதிகளையும் அந்த மாஸ்டர் பிளானில் சேர்ப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாஸ்டர் பிளான் திட்டம் 1974 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மே திங்களில், இந்தத் திட்டத்தில் கூடுதலாக சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இதற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுவதற்கு முன்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டு மேலும் சில பகுதிகள் அந்தப் பகுதியிலே சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான ஆய்வு தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி, அரசின் மூலம் அதைச் சேர்க்க இயலுமா என்பதை பரிசீலனை செய்யலாம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் நிவாரணம்

* 4045—திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கடனை தீர்க்க முடியாமல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வழங்கப்பட்டதை போல் கைத்தறி நெசவாளர்களுக்கும் கடன் நிவாரணம் வழங்கப் படுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) யாரும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தெந்த காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது? ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக கடன் வழங்கப்பட்டுள்ளதா? ஆமெனில், எவ்வளவு தொகை நிலுவையாக உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.